Deccan Chronicle

Dated: 05.04.2025

# TMC raises duplicate voter I-cards issue, stages protest

DC CORRESPONDENT
NEW DELHI, APRIL 4

Trinamul Congress MPs on Friday held a meeting with the full bench of the Election Commission (EC) and submitted a memorandum demanding that the poll panel reveal the number of duplicate Electors Photo Identification Cards (EPICs) and that voter identity cards should not be linked with Aadhaar. The TMC leaders then marched from the EC office to Vijay Chowk and then to the Parliament House complex, where they protested over the issue. In their memorandum, the TMC demanded action on the duplicate voter-identity cards issue and urged the EC to explain how it will ensure that duplicate and fake Aadhaar numbers will not be linked to EPICs and how fake and ghost voters will not be added to the electoral roll through this mechanism.

"We again reiterate our request that the EC should, in the interest of transparency, declare the total number of duplicate EPICs that currently exist," the memorandum said. The TMC said there have been credible allegations of Aadhaar cards being cloned and the use of these cloned Aadhaar to facilitate fake voter registration. The TMC has asked the EC how it will ensure that the alleged cloning of Aadhaar does not affect the EPIC and electoral registration of voters.

The leaders also said the proposed exercise of linking EPICs with Aadhaar is premature and will only create more problems rather than solving those. "Therefore, at this stage, the All India Trinamul Congress expresses its strong objection to the proposal of linking EPICs with Aadhaar," they said.

Deccan Chronicle
Dated: 05-04-2025

## SC rejects review plea on poll bonds

**New Delhi:** The Supreme Court has dismissed a plea seeking the review of its decision rejecting the petitions for confiscating Rs 16,518 crore received by political parties under the 2018 electoral bond scheme. A bench of Chief Justice Sanjiv Khanna and Justices J.B. Pardiwala and Manoj Misra dismissed the review plea filed by one Khem Singh Bhati against the top court's decision of August 2, 2024. The apex court had then rejected the petition seeking confiscation of money received under the scheme. *PTI*

## SC rejects petition on electronic bonds

**New Delhi:** The Supreme Court has dismissed a plea seeking review of its decision rejecting the petitions for confiscating `16,518 crores received by political parties under the 2018 electoral bond scheme. A bench of Chief Justice of India Sanjiv Khanna and Justices J.B. Pardiwala and Manoj Misra dismissed the review plea filed by one Khem Singh Bhati against the top court's decision of August 2, 2024. The apex court had then rejected the petition seeking confiscation of money received under the scheme. The bench on March 26 held, "The review petition is dismissed in terms of the signed order. Pending application(s), if any, shall stand disposed of." The top court's order, made available recently, also refused to accept the petitioner's prayer for an open-court hearing in the matter.

The New Indian Express

Dated: 05.04.2025

# SC turns down review plea on electoral bonds

SUCHITRA KALYAN MOHANTY
@New Delhi

THE Supreme Court has rejected a petition seeking review of its earlier decision denying the petitions for confiscating ₹16,518 crore received by political parties under the 2018 electoral bond scheme.

The review plea was filed by one Khem Singh Bhati challenging the top court's decision of August 2, 2024.

"We don't find any merit in the review plea. Accordingly, we dismiss it," said a three-judge bench led by Chief Justice Sanjiv Khanna, which was comprised of Justices J B Pardiwala and Manoj Misra, while dismissing the review plea.

On August 2, 2014, the SC rejected a batch of pleas, including the one filed by Bhati, who filed the review, seeking a court-monitored probe into the electoral bonds scheme (EBS) and observed it couldn't order a roving inquiry.

The review plea sought a recall of the order dismissing a previous petition seeking confiscation of money received under the scheme. Therefore, it sought the plea's restoration and a fresh hearing.

In October last year, the top court dismissed a petition seeking a review of the Constitution Bench's February 15 judgment, which struck down the Electoral Bonds scheme as unconstitutional.

On February 15, in a landmark verdict, the top court held that the electoral bonds scheme must be struck down as unconstitutional and directed banks to stop issuing bonds immediately.

"The Union has been unable to establish the measure adopted in clause 7(4)(1) of the electoral scheme is the least restrictive measure," a five-judge bench, headed by the CJI (Retired now) D Y Chandrachud, said in the order.

The Supreme Court also declared the Amendments to the Income Tax Act provision and Sec 29C of the Representation of Peoples Act to be ultra vires.

Daily Thanthi

Dated: 05.04.2025

ரூ.16 ஆயிரம் கோடி நன்கொடையை பறிமுதல் செய்ய கோரிக்கை

# தேர்தல் பத்திர வழக்கில் மறுஆய்வு மனு தள்ளுபடி

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஏப்.5-
தேர்தல் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற ரூ.16 ஆயிரம் கோடி நன்கொடையை பறிமுதல் செய்ய மறுத்த முந்தைய உத்தரவுக்கு எதிரான மறு ஆய்வு மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்தது.

### பத்திரம் ரத்து

அரசியல் கட்சிகளுக்கு ரொக்கமாக நன்கொடை அளிப்பதற்கு பதிலாக, தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிக்கும் திட்டத்தை கடந்த 2018-ம் ஆண்டு ஜனவரி 2-ந் தேதி மத்திய அரசு அறிவித்தது.

ஆனால், இந்த திட்டத்தில், நன்கொடை அளிப்பது யார், எவ்வளவு தொகை என்ற வெளிப்படைத்தன்மை இல்லாத காரணத்தால், தேர்தல் பத்திர திட்டத்தை ரத்து செய்யக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டன்.

அவற்றை விசாரித்த அப்போதைய தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையில் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு, தேர்தல் பத்திர திட்டத்தை கடந்த ஆண்டு பிப்ரவரி 15-ந் தேதி ரத்து செய்தது.

### ரூ.16 ஆயிரம் கோடி நன்கொடை

அதைத்தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி, தேர்தல் பத்திரம் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடை விவரங்களை தேர்தல் கமிஷனிடம் பாரத ஸ்டேட் வங்கி பகிர்ந்து கொண்டது. அந்த விவரங்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டன.

அரசியல் கட்சிகள் பெற்ற மொத்தம் ரூ.16 ஆயிரத்து 518 கோடி நன்கொடையை பறிமுதல் செய்ய உத்தரவிடக் கோரி, சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், சுப்ரீம்கோர்ட்டு அதை ஏற்க மறுத்து, கடந்த ஆண்டு ஆகஸ்டு 2-ந் தேதி அம்மனுக்களை தள்ளுபடி செய்தது.

### தள்ளுபடி

இதற்கிடையே, நன்கொடையை பறிமுதல் செய்ய மறுத்த உத்தரவை மறுஆய்வு செய்யக்கோரி, சுப்ரீம் கோர்ட்டில் கேம்சிங் பட்டி என்பவர் மறுஆய்வு மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி ஜே.பி.பார்திவாலா ஆகியோர் அடங்கிய அமர்வு, அதை தள்ளுபடி செய்தது. மேலும், திறந்த கோர்ட்டில் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் நிராகரித்துவிட்டது.

Dinamalar

Dated: 05-04-2025

# 'தேர்தல் பத்திர நிதியை பறிமுதல் செய்ய உத்தரவிட முடியாது'

**புதுடில்லி, ஏப். 5–**

தேர்தல் பத்திரங்கள் வாயிலாக அரசியல் கட்சிகள் திரட்டிய, 16,518 கோடி ரூபாயை பறிமுதல் செய்ய உத்தரவிட முடியாது என, உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தனிநபர் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவது வழக்கம். இதற்கு மாற்றாக, கடந்த 2018ல் தேர்தல் பத்திரம் திட்டத்தை மத்திய பா.ஜ., அரசு கொண்டு வந்தது.

**நன்கொடை**

இதன்படி, பெயர் தெரிவிக்காமல், யார் வேண்டுமானாலும், தேர்தல் பத்திரங்கள் வாயிலாக கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க முடியும்.

இது தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு சட்ட அமர்வு கடந்த ஆண்டு பிப்ரவரியில் தீர்ப்பளித்தது.

அதில், தேர்தல் பத்திர திட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டது.

மேலும், பத்திர விற்பனை செய்த வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்டவை யார், யாருக்கு எவ்வளவு பணம் கிடைத்தது என்ற விபரத்தை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தீர்ப்பை தொடர்ந்து பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்டவை தேர்தல் பத்திரம் வாயிலான நன்கொடை விபரங்களை தேர்தல் ஆணையத்திடம் அளித்தன.

அதன்படி, பா.ஜ., – காங்., உட்பட நாடு முழுதும் உள்ள அரசியல் கட்சிகள், மொத்தம் 16,518 கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்கள் வாயிலாக திரட்டியது தெரிந்தது.

இதையடுத்து, தேர்தல் பத்திரம் வாயிலாக திரட்டிய பணத்தை அரசியல் கட்சிகளிடம் இருந்து பறிமுதல் செய்யும்படி, உச்ச நீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அரசியலமைப்பு சட்டத்துக்கு முரணான திட்டம் என்பதால், அது தொடர்பாக நீதிமன்ற மேற்பார்வையில் விரைவாக விசாரணை நடத்தி, பணத்தை திரும்பப் பெற வேண்டும் என்றும் மனுக்களில் கூறப்பட்டது.

ஆனால், அனைத்து மனுக்களையும் கடந்த ஆண்டு ஆக., 2ல் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தின் முடிவை மறு பரிசீலனை செய்யக்கோரி, கெம் சிங் பாதி என்பவர் உட்பட மனுதாரர்களில் சிலர், மேல்முறையீட்டு மறுஆய்வு மனுக்களை தாக்கல் செய்தனர்.

**மறு பரிசீலனை**

இந்த மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி பர்திவாலா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. இதில், நேற்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்தது.

தீர்ப்பில், 'தேர்தல் பத்திரங்கள் வாயிலாக அரசியல் கட்சிகள் பெற்ற நிதியை பறிமுதல் செய்வதற்கு எதிராக, ஏற்கனவே உச்ச நீதிமன்றம் எடுத்த முடிவை மறு பரிசீலனை செய்ய முடியாது.

'இது தொடர்பான மறு ஆய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. இது போல, இதே விவகாரம் தொடர்பான மனுக்கள் ஏதேனும் நிலுவையில் இருந்தால் அந்த மனுக்களும் தள்ளுபடி செய்யப்படுகின்றன' என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

Dinamani

Dated: 05.04.2025

# தேர்தல் நிதிப் பத்திரம் மூலம் கட்சிகள் பெற்ற நன்கொடை: பறிமுதல் செய்யக் கோரிய மறுஆய்வு மனு தள்ளுபடி

புது தில்லி, ஏப். 4: தேர்தல் நிதிப் பத்திரத் திட்டத்தின்கீழ் அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடையைப் பறிமுதல் செய்யக்கோரி தாக்கல் செய்த மனுக்களை உச்சநீதிமன்றம் ரத்து செய்திருந்த நிலையில், அதை மறு ஆய்வு செய்யக் கோரிய மனுவையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் தேர்தல் நிதிப் பத்திர திட்டத்தை கடந்த 2018, ஜனவரி 2-இல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

இந்தத் திட்டம் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது எனக் கூறி கடந்த ஆண்டு பிப்ரவரி 15-இல் முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு ரத்து செய்தது.

இதைத்தொடர்ந்து, கட்சிகள் பெற்ற நன்கொடை விவரத்தை பாரத ஸ்டேட் வங்கி இந்திய தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. அதன் பிறகு தேர்தல் ஆணையம் தனது வலைதளத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்டது.

இதையடுத்து, தேர்தல் நிதிப் பத்திர திட்டத்தில் உச்சநீதிமன்ற கண்காணிப்புடன் கூடிய விசாரணை நடத்த வேண்டும் எனவும், இத்திட்டத்தின் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற ரூ.16,158 கோடியை பறிமுதல் செய்யக் கோரியும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்சநீதிமன்றம் கடந்த 2024, ஆகஸ்ட் 2-ஆம் தேதி தள்ளுபடி செய்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி கேம் சிங் பாட்டீ என்பவர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா மற்றும் நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்ததுடன், இந்த விவகாரம் தொடர்பான விசாரணையை நீதிமன்றத்தில் வெளிப்படையாக நடத்த வேண்டும் என்ற மனுதாரர் கோரிக்கையையும் ஏற்க நீதிபதிகள் அமர்வு மறுத்தது.